CS (MAIN) EXAM, 2011

Serial No. [ ] **F–DTN–L–SAD–U**

# TAMIL

**(Compulsory)**

*Time Allowed : Three Hours* *Maximum Marks : 300*

## INSTRUCTIONS

*Candidates should attempt **ALL** questions.*
*The number of marks carried by each question is indicated at the end of the question.*
*Answers must be written in **Tamil**, unless otherwise directed.*
*Prescribed word-limit must be followed for Q. No. 3. The precis must be attempted **only** on the special precis sheets attached to this question paper. These precis sheets are to be carefully detached from the question paper and securely attached to the answer book.*

1. கீழ்க் காணும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றினைக் குறித்து 300 சொற்களில் கட்டுரை எழுதுக :- 100

(a) தனிமனித ஒழுக்கச் சிக்கல்களும் அரசியலும்.

(b) சமூக முன்னேற்றத்திற்கு அடிப்படை உந்து சக்தியாக அமைவது சமயம் அல்லது அறிவியல்.



(Contd.)

(c) அனைவருக்கும் உணவு: நமது மக்களாட்சி முறையின் முன் உள்ள சவால்.

(d) வேகத்தை விரும்பும் சமூகப் பழக்கம் பதற்றத்தையும் குற்றச் செயல்களையும் பெருக்குகிறது.

(e) செயற்கை கணிப்பு அறிவு மனித மூளைச் செயல்பாட்டிற்குப் பதிலீடாக அமைகிறது.

2. கீழ்க் காணும் பகுதியைக் கவனமாகப் படித்துப் பின் வரும் வினாக்களுக்குத் தெளிவான, சுருக்கமான விடைகளை எழுதுக :- 6×10=60

மிக விரைவாகப் பெருகும் தொழில்மயமாக்கக் காலகட்டத்தை நாம் கடந்து கொண்டிருக்கிறோம். தற்போது மிக அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு தொழிற்சாலைப் பணிகளை அளிக்கிறோம். நீங்கள் விரும்பும் பணியைப் பற்றி எந்த அளவுக்கு நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் என்பது முக்கியமில்லை, அதைவிட உங்களுக்குத் தெரிந்த ஒருவரின் தொடர்புகளைப் பயன்படுத்தி வேலை வாங்கமுடியுமா என்பதே முக்கியமானது என்னும் ஒரு நிலை இந்தியாவில் நிலவி வருகிறது. சிறப்பான பணிக்குத் திறமையே அடிப்படையானது என்று மக்கள் எண்ணுவது இல்லை. <u>உயர் சிறப்புத் திறனை வளர்த்தல்</u> என்பதற்கு நமது கல்விமுறையில் மிக அடிப்படையான இடம் உள்ளது, திறனை வளர்த்தல் என்பதற்குத் தகுந்த முக்கியத்துவம் கிடைக்காதபோது தகுதி என்பது அவமதிப்புக்கு



(Contd.)

உள்ளாகிறது. இது ஒரு வகையில் நமது கல்வி முறையைச் சீரழிக்கிறது, மற்றொரு வகையில் சமூகக் கல்விக்கான இயக்கத்தை உருவாக்க வேண்டும் என்னும் விருப்பத்தை நலிவடையச் செய்கிறது.

ஒரு பாலம் கட்டப்படும் பொழுதோ, ஒரு சாலை அமைக்கப்படும் பொழுதோ மணல், சிமெண்ட், சுண்ணாம்பு போன்றவை எந்த எந்த விகித அளவில் கலக்கப்படவேண்டும் என்பதற்கான குறிப்பிட்ட முறை பின்பற்றப்படுகிறது, அதன் அடிப்படையில்தான் அவை முறையாகக் கட்டப்படுவதுடன் நீண்ட நாட்கள் நிலைத்திருக்கக் கூடியனவாகவும் அமைகின்றன. ஆனால் இந்த முறை சீரழிந்து போயுள்ளது என்பதைத்தான் நமது அனுபவம் உணர்த்துகிறது. சில அணைகளில் விரிசல்கள் ஏற்படுவது பற்றியும் மழைக்காலங்களில் சாலைகள் அடித்துச் செல்லப்படுவது பற்றியும் அவ்வப்போது கேட்க முடிகிறது.

இவையெல்லாம் தரக்கட்டுப்பாடு என்பதுடன் உறவுடையதாக உள்ளன, கட்டுமானப் பொருள்களின் தரத்துடன் மட்டும் உறவுடையதல்ல இது, மனிதர்கள் மற்றும் அவர்களின் பொறுப்புணர்வு என்பதன் தரத்துடன் உறவுடையது.

எதிர்பாராத ஒரு வகையில் நம் ஜனநாயக அமைப்பு தகுதி என்பதைப் புறக்கணிக்கும் சில சூழ்நிலைகளை உருவாக்குகிறது, இந்த நாட்டில் திறமைக்கு மதிப்பில்லை என மக்கள் கூறுவதைக்



(Contd.)

கேட்க முடிகிறது. இந்த நிலை பொதுப்பணி சார்ந்த பதவிகளை வகிப்பதற்கும் பொது அலுவல்களை நடத்துவதற்கும் தகுதியோ மிகுதிறமையோ ஒழுக்கத் தன்மையோ தேவையில்லை என்னும் ஒரு எண்ணத்தை உருவாக்குகிறது.

**கேள்விகள் :**

(a) நல்ல வேலையைப் பெறுவதற்கான வழியென நம் நாட்டில் மக்கள் எதனை நினைக்கிறார்கள்?

(b) திறமையின் மீதான மதிப்பை நாம் எப்போது இழக்கிறோம் ?

(c) திறமை மீதான அவமதிப்பு எவ்வகையான தீய விளைவுகளை ஏற்படுத்துகிறது ?

(d) மக்களுடைய பொறுப்புணர்வுக்கு நாம் மதிப்பளிக்காதபோது என்ன நிகழ்கிறது ?

(e) தகுதி, திறமை, ஒழுக்கத் தன்மை என்பவை புறக்கணிக்கப்படும்போது அதற்கான காரணமாக அமைவது எதுவாக உள்ளது ?

(f) இந்தப் பகுதியில் அமைந்துள்ள அடிக்கோடிடப் பட்ட தொடர்களின் கருத்தை விளக்குக.

3. கீழ்க் காணும் பகுதியை 190-210 சொற்களுக்குள் சுருக்கி எழுதுக. சுருக்கப் பகுதிக்கெனத் தரப்பட்டுள்ள தனித்தாள்களைப் பயன் படுத்துக. சொற்கள் குறிப்பிட்ட அளவினைக்



(Contd.)

கடக்கும்போது அதற்கேற்ப மதிப்பெண்கள் குறைக்கப்படும். 150 சொற்களுக்குக் குறைவான அல்லது 250 சொற்களுக்கு மிகுதியான சுருக்கப் பகுதிகளுக்கு எந்த மதிப்பெண்ணும் அளிக்கப்பட மாட்டாது :-

60

எனது தந்தை போர்பந்தரை விட்டு ராஜஸ்தானிக சபையில் ஒரு உறுப்பினராகச் சேருவதற்கென ராஜ்கோட்டிற்கு இடம் மாறியபோது எனக்கு ஏழு வயது இருந்திருக்கவேண்டும். அங்கு ஒரு தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்டேன். அங்கு எனக்குக் கற்பித்த ஆசிரியர்களின் பெயர் மற்றும் அவர்களைப் பற்றிய தகவல்கள் உட்பட அந்த நாட்கள் நன்கு என் நினைவில் உள்ளன. போர்பந்தரில் இருந்தது போலவே எனது கல்வியைப் பற்றிக் கூற இங்கும் அதிகமாக எதுவும் இல்லை. ஒரு மந்தமான மாணவனாகவே என்னால் இருக்க முடிந்தது. அந்தப் பள்ளியில் இருந்து புறநகர்ப் பகுதியில் அமைந்த பள்ளி ஒன்றிற்குச் சென்றேன், பின்பு உயர்நிலைப் பள்ளிக்கும் சென்றேன், அந்த சமயத்தில் எனக்குப் பன்னிரண்டு வயதாகி இருந்தது. இந்தச் சிறுகால அளவில் எனது ஆசிரியர்களிடமோ என் பள்ளித் தோழர்களிடமோ ஒரு பொய்யைக் கூட நான் கூறியதாக எனக்கு நினைவில்லை. நான் மிகுந்த கூச்ச சுபாவம் கொண்டவனாக இருந்தேன், மற்றவர்களோடு சேருவதைத் தவிர்த்து வந்தேன். எனது புத்தகங்களும் பாடங்களுமே என்னுடைய முழுநேர நண்பர்கள். நேரத்திற்குப் பள்ளியில்



(Contd.)

இருப்பது, பள்ளி முடிந்ததும் வீட்டிற்கு ஓடி வருவது அதுதான் எனது தினசரி பழக்கம். உண்மையாகவே நான் வீடுநோக்கி ஓடி வருவேன் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் பிறருடன் பேசுவது என்பதை என்னால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. என்னை யாராவது கேலி செய்து விடுவார்கள் என்ற பயம் எனக்குக் கூடுதலாக இருந்தது.

உயர்நிலைப் பள்ளியில் எனது முதலாமாண்டுத் தேர்வின்போது நடந்த ஒரு நிகழ்ச்சியைக் குறிப்படுவது பொருத்தமாக இருக்கும். பள்ளிக்கல்வி ஆய்வாளர் திரு. கில்ஸ் எங்கள் பள்ளியை ஆய்வு செய்ய வந்திருந்தார். சொல்வதெழுதுதல் பயிற்சிக்கென அவர் எங்களுக்கு ஐந்து சொற்களைத் தந்தார். அதில் ஒரு சொல் 'கெட்டில்' என்பது. அதனை நான் பிழையாக எழுதியிருந்தேன். எங்கள் ஆசிரியர் தனது பாதத்தின் நுனியால் சுட்டிக்காட்டி எனக்கு அதை உணர்த்த நினைத்தார், ஆனால் அவரால் எனக்கு அதை உணர்த்த முடியவில்லை. மற்றவரைப் பார்த்து எழுதுவதைத் தடுக்க கண்காணிப்பில் இருக்கும் ஆசிரியரே பக்கத்து மாண வனின் பலகையைப் பார்த்து எழுதும்படி எனக்குச் சொல்லித் தருவார் என்பதை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. இதன் விளைவாக என்னைத் தவிர மற்ற அனைத்து மாணவர்களும் எல்லாச் சொற்களையும் சரியாக எழுதியிருந்தனர். நான் மட்டும்தான் முட்டாளாக



(Contd.)

இருந்து விட்டேன். இந்த முட்டாள்தனத்தை எனக்கு உணர்த்த ஆசிரியர் பின்பு முயற்சி செய்தார், ஆனால் பயன் ஒன்றும் இல்லை. பிறரைப் பார்த்து எழுதும் கலையை நான் ஒருபோதும் கற்றுக் கொள்ளவே இல்லை.

இந்த நிகழ்ச்சி எனது ஆசிரியர் மீதான எனது மரியாதையைச் சற்றும் குறைத்துவிட வில்லை. மூத்தவர்களின் தவறுகளைப் பொருட் படுத்தாமல் இருப்பது எனது இயல்பாக இருந்தது. இந்த ஆசிரியரின் வேறு சில குறைபாடுகளும் பின்பு எனக்குத் தெரிய வந்தன. ஆனால் அவர் மீதான எனது மரியாதை அப்படியே இருந்தது. பெரியவர்களின் கட்டளைகளை ஏற்று நடப்பதைத் தவிர, அவர்களின் நடத்தைகளைக் கண்காணிக்கக் கூடாது என்பதை நான் கற்றுவைத்திருந்தேன்.

அதே காலகட்டத்தில் நடந்த வேறு இரு நிகழ்ச்சிகள் நிலையாக என் நினைவில் படிந்துள்ளன. என் பள்ளிக்கூட பாடங்களைத் தவிர வேறு எதனையும் படிக்காத பழக்கத்தை நான் ஒரு விதிமுறைபோலப் பின்பற்றி வந்தேன். அன்றன்றைக்கான பாடங்களை அன்றே செய்துவிட வேண்டும், ஏனென்றால் எனது ஆசிரியர் என்னைக் கண்டிப்பதை நான் விரும்பிவில்லை, அதே சமயம் அவரை ஏமாற்றுவத்தையும் நான் விரும்பவில்லை. ஆகவே, நான் பாடங்களை எழுதிவிடுவேன், ஆனால் பல சமயம் என்மனதில் அவை



(Contd.)

படிவதில்லை. அந்த வகையில், பாடங்களை நான் முறையாகப் படிக்காவிட்டாலும் கூடுதலாக வேறு எதையும் படிப்பது என்கிற கேள்விக்கே இடம்ல்லை. ஆனால், என் தந்தையார் வாங்கி வைத்திருந்த ஒரு புத்தகத்தின் மீது என் பார்வை பட்டது. அந்த நூல் 'சிரவனன் பித்ரிபக்தி நாடகம்' என்பது (சிரவனன் தனது பெற்றோர்களிடம் கொண்டிருந்த பக்தியைக் குறித்த ஒரு நாடகம்).

அதனை மிகுந்த ஈடுபாட்டுடன் படித்தேன். அதே நேரத்தில் இடம்பெயர்ந்து சென்று கதை சொல்லி நடிக்கும் குழுவினர் எங்கள் ஊருக்கு வந்திருந்தனர். அவர்களின் படங்களில் ஒன்று சிரவனன் தன் பெற்றோர்களை ஊஞ்சல்காவடியில் வைத்து தோளில் சுமந்தபடி யாத்திரை செல்வதை விளக்கிக் காட்டியது. அந்தப் 'புத்தகமும் கதைப்படமும் என் உள்ளத்தில் அழிக்க முடியாத பதிவை உருவாக்கி விட்டன. 'நீ பின்பற்ற வேண்டிய ஒரு முன்மாதிரி இது' என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். சிரவனன் இறந்தபின் அவன் பெற்றோர்கள் கதறி அழுது பாடும் பாட்டு இன்னும் என் நினைவில் பசுமையாகப் பதிந்துள்ளது. நெஞ்சை உருக்கும் அந்தப் பாடலின் மெட்டு ஆழமாக என்னைப் பாதித்தது. என் தந்தையார் வாங்கித் தந்திருந்த இசைக் கருவியில் அதனை நான் வாசிப்பது உண்டு.



(Contd.)

4. கீழ்க் காணும் பகுதியைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதுக :- 20

Tulasidas's imagery covers a vast range. No poet of medieval period — not even his great contemporary Surdas — can vie with Tulasidas in respect of the infinite variety of imagery employed by him. He has collected his images from peasant life, court life, priestly environments, rural and civic life, philosophical treatises, literary classics, mythological works and folk literature. His poetry is a vast gallery of all kinds of images ranging from exquisite miniature paintings to large frescoes. Normally he likes simple and integrated images, but is quite capable of creating complex imagery as well. What he seems to abhor is a truncated image of which we can hardly search out a single example. His whole poetic creation is an endless endeavour to give a concrete tangible form to the abstract — to impart physical charms and mental qualities of human personality to an absolute concept. Actually the very conception of Personified Godhood is a grand exercise in image-making. In this context, what is of special relevance to the modern reader in Tulasidas's art is his unconventional approach to literary-cultural tradition and religion. A number of poets in other Indian languages have also produced great literature in this regard, but Tulasi appears to have surpassed them all.



(Contd.)

5. கீழ்க் காணும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக :- 20

உருவாக்குதல், வளர்த்தல், பாதுகாத்தல் என்பவை இயற்கையைச் சார்ந்துள்ளன என்பது பொது அறிவு சார்ந்த ஒன்று. இயற்கையைப் பாதுகாப்பதிலும் உருவாக்குவதிலும் மரங்கள், காடுகள், கொடிகள், புதர்கள் மற்றும் குறுங்காடுகள் போன்வற்றிக்கு மிகப்பெரிய பங்குள்ளது. உண்மையில் மனிதர்களின் உயிர் வாழ்க்கை என்பதே மரங்களையும் காடுகளையும் சார்ந்துள்ளது. மண்ணைப் பாதுகாப்பதில் மரங்கள் மிகப் பெரிய பங்களிக்கின்றன. புயலின் வேகத்தைத் தடுத்து மண் பரப்பு இடம் பெயர்ந்து விடாமல் மரங்கள் பாதுகாக்கின்றன. மண் அரிப்பைத் தடுத்து மலைகளை நிலைத்திருக்கச் செய்கின்றன. காடுகள் பறவைகளையும் விலங்குகளையும் பாதுகாக்கின்றன. அதன் மூலம் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சாத்தியமாகிறது. காடுகளே மழையை உருவாக்குகின்றன. அதிக மரங்கள் உள்ள இடங்களில் மழை பொழிவு அதிகமாக உள்ளது. ஆனால் பாலைவனங்கள் மழைக்காக காத்துக் கிடக்கின்றன. மழை தானியங்களை விளைவிக்கிறது. தானியங்கள் மனிதர்களை வாழவைக்கின்றன. ஏராளமான மரங்களின் இலைகளைத் தீவனமாக உண்டு விலங்குகள் உயிர் வாழ்கின்றன. மரங்களில் இருந்து மரக்கட்டைகளைப் பெறுகிறோம். அவை எரிபொருளாகவும் வீடு கட்டுவதற்கும்



(Contd.)

பயன்படுகின்றன. மரங்களில் இருந்து பெறப்படும் மரக்கட்டைகள் இருப்புப் பாதைகள், கப்பல்கள், விமானங்கள் போன்ற போக்குவரத்து அமைப்புகளைக் கட்டப் பயன்படுகின்றன. மருந்துப் பொருள்கள், பசைகள், காகிதம், வத்திக்குச்சிகள், பல்வேறு வகை எண்ணெய்கள், சுவையும் ஊட்டச்சத்தும் நிறைந்த பல வகைப் பழங்கள் எனப் பலவற்றை அளிக்கும் குன்றாத வளங்களாக மரங்கள் உள்ளன. மரங்களின் குளிர்நிழல் கதிரவனின் வெப்பத்திலிருந்து ஆறுதல் அளிக்கிறது. அவற்றின் இனிய மணம் கொண்ட மலர்கள் நம் நெஞ்சங்களைப் புத்துணர்ச்சியால் நிறைக்கின்றன.

6. (a) கீழ்க் காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக :- 5

(i) இயற்கை வளம்

(ii) போராட்டம்

(iii) தடுமாற்றம்

(iv) சூழலியல்

(v) பாதுகாப்பு.

(b) கீழ்க் காணும் சொற்களைப் பிரித்து எழுதுக :- 5

(i) பொற்சிலை

(ii) ஊராட்சி

(iii) மனப்பாடம்

(iv) நீரூற்று

(v) காற்றாலை.

(c) கீழ்க் காணும் சொற்களுக்கு எதிர்ச் சொற்கள் எழுதுக :- 5

(i) விருப்பு

(ii) வேற்றுமை

(iii) வீழ்ச்சி

(iv) கடுமை

(v) ஆக்கம்.

(d) கீழ்க் காணும் சொற்களின் பிழைநீக்கி எழுதுக :- 5

(i) வாண்மழை

(ii) கடலளை

(iii) புறுவம்

(iv) பசுங்கண்று

(v) பதட்டம்.

(e) கீழ்க் காணும் சொற்களின் பொருள் வேறுபாட்டினை ஏற்ற சொற்றொடர்களில் அமைத்துக் காட்டுக :- 10

(i) நீளம் - நீலம்

(ii) கலம் - களம்

(iii) தறி - தரி

(iv) மனம் - மணம்

(v) கோலம் - கோளம்.

(f) கீழ்க் காண்பவற்றுள் ஏதேனும் ஒரு தொடரை விளக்கி **ஐந்து** சொற்றொடர்களில் ஒரு பத்தி எழுதுக :- 10

(i) மத நல்லிணக்கம்

(ii) பெண் விடுதலை.

Sr. No. 

**F–DTN–L–SAD–U**

अपना अनुक्रमांक इन पत्रकों पर न लिखें
DO NOT WRITE YOUR ROLL NO. ON THESE SHEETS

# TAMIL
## (Compulsory)

सार लेखन के लिए विशेष पत्रक
**SPECIAL SHEETS FOR PRECIS**

इस पत्रक के दोनों ओर लिखिए। प्रत्येक खण्ड में एक शब्द और प्रत्येक पंक्ति में पांच शब्द लिखिए। अपने उद्धरण में सामान्य रूप से विराम आदि चिन्ह लगाइए और यदि आवश्यक हो तो प्रत्येक पैराग्राफ के अन्त में एक पंक्ति खाली छोड़ते हुए इसे पैराग्राफों में विभक्त कीजिए। यदि चाहें तो उत्तर-पुस्तिका के साधारण कागज पर पहले एक कच्चा प्रारूप तैयार कर सकते हैं। अपनी उत्तर-पुस्तिका दे देने से पहले कच्चे कार्य को आर-पार पंक्ति डालकर काट दिया जाना चाहिए। आप सारपत्रक को अपनी उत्तर-पुस्तिका के अन्दर सुरक्षित रूप से बांध दीजिए।

**Use both sides of this sheet. Write one word in each division and five words in each line. Punctuate your passage in the usual way and divide it into paragraphs, if necessary, leaving a line blank at the end of each paragraph. You may make a rough copy first, if you so wish, on ordinary paper in the answer-book. The rough work should be scored through before you hand over your answer-book. You should fasten the precis sheet securely inside your answer-book.**

| शीर्षक<br>Title | | | | | इस हाशिए<br>में न लिखें<br>Do not write on<br>this margin |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | 70 |
| | | | | | 80 |
| | | | | | 90 |
| | | | | | 100 |
| | | | | | 110 |
| | | | | | 120 |
| | | | | | 130 |
| | | | | | 140 |
| | | | | | 150 |
| | | | | | 160 |
| | | | | | 170 |
| | | | | | 180 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | 190 |
| | | | | | 200 |
| | | | | | 210 |
| | | | | | 220 |
| | | | | | 230 |
| | | | | | 240 |
| | | | | | 250 |
| | | | | | 260 |
| | | | | | 270 |
| | | | | | 280 |
| | | | | | 290 |
| | | | | | 300 |